# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No.19/2024

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-3 |
| Name | : சிராஜுதீன் |
| Father's / Husband Name | : முகமதுஅலி |
| Village | : கிச்சிபாளையம் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.R.Ashok Raj Nirmal Reddy, Superintendent of this court on the day of 05.03.2026 Evidence Recorded from 01.26 p.m. to 01.32 p.m.

**1 –ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார் மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் நியூ சினிமா தியேட்டர் எதிர்புறம், குகை, சேலத்தில் டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையெழுத்து மட்டும் என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து மட்டும் **அதசாஆ.2** ஆகும். இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு ஒருநாள் செவ்வாய்பேட்டை போலிசார் கையெழுத்து

கேட்டார்கள், நான் கையெழுத்து போட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி குவிமுச 161 (3) ன் படியான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டினார். சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் போலிஸ் விசாரணையில் 07.08.2023ம் தேதி மாலை 06.30 மணியளவில் SMC காலனியை சேர்ந்த விமல்குமார் என்பவருடன் கிச்சிபாளையத்தை சேர்ந்த விக்னேஷ், மாதவன், இளையராஜா ஆகியோர்கள் சேர்ந்து SMC காலனியை சேர்ந்த சந்திரசேகர் என்பரை கடத்தி பொதுமக்களிடம் கத்தியை காட்டி மிரட்டியதை கேள்விபட்டேன் என்றும் அதுசம்பந்தமாக நான் சம்பவ இடம் சென்றேன் என்றும் 08.09.2023–ம் தேதி பகல் 02.00 மணியளவில் நான் சம்பவ இடத்தில் இருக்கும் போது செவ்வாய்பேட்டை காவல் ஆய்வாளர் வந்து என் முன்னிலையலும் வேலு என்பவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் வேலு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) இல்லை</u>**

**<u>மறுவிசாரணை. இல்லை</u>**

ஒம்/– S. எழில் வேலவன், இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.